**முதன்மை மாவட்ட நீதிமன்றம், விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம்**

**O.S.No.18/2019**

21.08.2025 இன்று 1969ஆம் ஆண்டு சட்டம் 10-ன் படி திருமதி.கோ.லதா, Bench Clerk Gr-1 அவர்களால் சாட்சிக்கு பிரமாணம் செய்விக்கப்பட்டது.

வாதி சாட்சி 3 வேணுகோபால் த/பெ.வெள்ளைகண்ணு: 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:

நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்களை படித்து பார்த்து தான் கையொப்பம் செய்துள்ளேனா என்றால் ஆமாம். 1ம் பிரதிவாதியின் கணவர் ராமசாமி 5ம் பிரதிவாதி தணிகை அரசிடம் பெற்றதாக கூறும் அடமானம் கடன் பத்திரத்தை நான் பார்த்திருக்கிறேனா என்றும் அதில் நான் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளேனா என்றும் கேட்டால் நான் அந்த பத்திரத்தை பார்க்கவில்லை, அதில் சாட்சி கையொப்பம் போடவில்லை. அந்த அடமான கடன் வாங்கிய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனக்கு ராமசாமி நேரடியாக சொன்னார். ராமசாமி பெயரில் கேஸ் கம்பெனி உள்ளது என்று நான் கூறுவது நேரடியாக எனக்கு தெரியுமா என்றால் எனக்கு நேரடியாக தெரியாது, ராமசாமி சொல்லி தான் எனக்கு தெரியும். ராமசாமி தற்போது காலமாகிவிட்டதால் அவர் சொல்லி எனக்கு தெரியும் என்று வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. சென்னையில் ராமசாமி நடத்தியதாக நான் கூறும் கேஸ் கம்பெனி பெயர் தெரியுமா என்றால் பெயர் தெரியாது, நான் சென்னை சென்று கேஸ் கம்பெனியை பாாக்கவில்லை. சித்தாமூர் இந்தியன் வங்கியில் ராமசாமி கடன் வாங்கியதாக கூறும் விபரம் எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது. அவர் எந்த தேதியில் எதற்காக கடன் வாங்கினார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் 2008ம் வருடம் டிராக்டர் வாங்குவதற்காக மொத்தம் ரூ.8 லட்சம் இரண்டு தவணைகளாக கடன் வாங்கியதாக ராமசாமி என்னிடம் கூறினார்.

டிராக்டர் வாங்குவதற்காக கடன் வாங்கினார் என்று பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேனா என்றால் இல்லை. இந்தியன் வாங்கிய கடனை ராமசாமி திருப்பி கட்டாததால் சொத்து ஏலத்திற்கு வந்ததாக நான் கூறியுள்ளது எப்படி எனக்கு தெரியும் என்றால் நான் என் வேலை விசயமாக அந்த வங்கிக்கு போய் இருந்தேன் அப்போது என்னிடம் இது பற்றி வங்கியில் கூறினார். வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளிடம் தெரிவிக்காமல் வங்கியினர் எனக்கு தெரிவிக்கவேண்டிய காரணம் என்ன என்றால் அவர்களிடம் சென்று சொல்லும்படி என்னிடம் வங்கியினர் கூறினார். நான் வங்கிக்கு சென்றதாகவும் வங்கியினர் என்னிடம் ராமசாமி வாங்கிய கடன் பற்றி கூறியதாகவும் சொல்வது பொய் என்றால் சரியல்ல.

6ம் பிரதிவாதி செந்தில்குமாரிடம் கடன் வாங்கி, வங்கி கடனை 1,2 பிரதிவாதிகள் மற்றும் காலம் சென்ற பரமசிவம், கண்ணன் ஆகியோர் அடைத்தார்கள் என்று நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். 6ம் பிரதிவாதியிடம் அவர்கள் கடன் வாங்கிய போது நான் உடன் இருந்து கடன் வாங்கி தந்தேனா என்றால் இல்லை, ஆனால் அந்த கடன் வாங்கியது பற்றி பரமசிவமும் கண்ணனும் என்னிடம் கூறினார்கள். கண்ணனும், பரமசிவமும் தற்போது உயிருடன் இல்லை என்பதால் அவர்கள் என்னிடம் கடன் வாங்கியது பற்றி கூறியதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. 6ம் பிரதிவாதியிடம் வாங்கிய கடனை பொதுவில் அடைக்கவேண்டும் என்று பேசப்பட்டதாகவும் அந்த கடன் நாளதுவரை பைசல் செய்யாமல் பொதுகுடும்ப கடனாக இருந்துவருவதாகவும் நான் கூறியுள்ளது எனக்கு நேரடியாக தெரியுமா என்றால் நேரடியாக தெரியாது, கண்ணனும், பரமசிவமும் என்னிம் கூறினார்கள். சட்டத்திற்கு புறம்பாக 2ம் பிரதிவாதி செட்டில்மெண்ட் ஏற்படுத்தியிருப்பதாக நான் கூறியுள்ளது எப்படி எனக்கு தெரியும் என்றால் வாதி கிருஷ்ணனும் 2ம் பிரதிவாதி ராஜசேகரும் என்னிடம் கூறினார்கள். ஊரில் ஏற்பட்ட பஞ்சாத்து பைசல்களை 2ம் பிரதிவாதி பொதுகுடும்பத்தில் அவர்

பங்கு கடனை திருப்பி செலுத்தியதால் 1ம் பிரதிவாதி அவர் பெயருக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்தார் என்றால் அது எனக்கு தெரியாது. மேற்சொன்ன இரண்டு கடன்களை தவிர பொதுகுடும்பத்திற்கு மேலும் சில கடன்களும் உள்ளது என்றும் அந்த கடன்களை வாதியும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் அடைத்துவிட்டு பாகம் பிரித்துக்கொள்ள வேண்டும் என்று பேசப்பட்டது என்றும் சொன்னால் அது எனக்கு தெரியாது. நான் வாதிக்கும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கும் என்ன உறவுமுறை என்றால் ராமசாமி என் அத்தை மகன் ஆவார். நான் சொல்வது போல அவர்களின் நெருங்கிய உறவினர் இல்லை என்றும் நான் ஊர்காரர் மட்டும் தான் என்றும் சொன்னால் சரியல்ல.

(மதிய உணவு இடைவேளைக்காக குறுக்குவிசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.)

மதிய உணவு இடைவேளைக்கு பிறகு குறுக்குவிசாரணை தொடர்ச்சி:

இந்த வழக்கில் 1,2 மற்றும் 4 பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனை விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அவர்கள் தாக்கல் செய்துள்ள ஆட்சேபனையில் பொதுகுடும்ப கடன்களை வாதியும் 1 முதல் 4 பிரதிவாதிகளும் பிரித்துக்கொண்டு பாகம் பிரித்துக்கொள்வதில் ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளது எனக்கு தெரியுமா என்றால் அது எனக்கு தெரியாது.

செஞ்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்.163/ 2020 என்ற வழக்கை நான் இந்த வழக்கு வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகள் மீது தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். 14.11.1975ம் தேதியில் என் அப்பா வெள்ளைக்கண்ணு கவுண்டர், சர்வே எண்.63/4ல் 31 சென்ட்டில் 20 சென்ட் நிலத்தை ராமசாமி கவுண்டருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளதாக அந்த வழக்கில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் செய்து கொடுத்த பிறகு ராமசாமி கவுண்டர் அந்த சொத்துக்களை அனுபவிக்கவில்லை என்றும் நாங்களே சொத்துக்களை அனுபவித்து வருகிறோம் என்றும் அந்த வழக்கில் கூறியுள்ளேன் என்றால் ஆமாம். வாதி மற்றும் 1 முதல் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வழக்கு

தாக்கல் செய்துவிட்டு தற்போது வாதியுடன் சேர்ந்துகொண்டு அவருக்கு ஆதரவாக பொய் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு இவ்வழக்கில் சாட்சி சொல்ல எனக்கு சம்மன் வந்ததா என்றால் இல்லை. இவ்வழக்கில் வாசா.2 ரமேஷ் என்னை இன்று சாட்சி சொல்ல அழைத்து வந்துள்ளார் என்றால் சரியல்ல.(ஆனால் வா.சா.2 ரமேஷ் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி உள்ளார், அவர் இந்த சாட்சியுடன் துணைக்கு வந்ததாக நீதிமன்றத்தில் தெரிவித்தார்).

நானும் சாட்சி ரமேஷிம் சேர்ந்துக்கொண்டு வாதி கிருஷ்ணன் 1 முதல 4 பிரதிவாதிகளுடன் சமாதானமாக பாகம் பிரித்துக்கொள்வதை தடுத்து சொத்தை அபகரிக்கும் நோக்கத்தில் இந்த வழக்கு 2019ம் ஆண்டு தாக்கல் செய்யவைத்துவிட்டு நான் 2020ம் ஆண்டு செஞ்சி மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் சொத்து உரிமை விளம்புகை பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால், வெள்ளைகண்ணு கவுண்டர் ராமசாமிக்கு 20 சென்ட் கிரையம் கொடுத்தார், திருப்பி ராமசாமி கவுண்டர் வெள்ளைகண்ணு கவுண்டருக்கு 20 சென்ட் கிரையம் கொடுத்தார், இது நடந்தது 1975ம் வருடம், திரும்பவும் 2003ம் வருடம் பெரியமகள் திருமணத்திற்காக ராமசாமி, வெள்ளைகண்ணு கவுண்டருக்கு கொடுத்த சொத்தை விற்றுவிட்டார், அதிலிருந்து என் அப்பா ராமசாமி கவுண்டருக்கு கொடுத்த சொத்தை நாங்களே அனுபவித்து வருகிறோம். எங்களிடமிருந்து கிரையம் வாங்கிய சொத்தை தான் ராமசாமி விற்றார் என்றும் எங்களுக்கு கொடுத்த சொத்தை ராமசாமி விற்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. ஏற்கனவே வழக்கறிஞர் டைப் செய்து வைத்திருந்த பிரமாண பத்திரிக்கையை நான் படித்து பார்க்காமல் கையெழுத்து போட்டு சாட்சி சொல்கிறேன் என்றும் இந்த பிரமாண வாக்குமூலத்தில் உள்ள விபரங்கள் சாட்சி ரமேஷ் சொன்ன விபரங்கள் அடிப்படையில் தயார் செய்யப்பட்டுள்ளது என்றும்

சொன்னால் சரியல்ல. நான் பிரமாண வாக்குமூலத்தில் கூறியுள்ள விபரங்கள் பொய்யான அம்சங்கள் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

Sd/- A.Manimozhi
Principal Sessions Judge,
Villupuram.